செய்தி வெளியீடு எண் :20 நாள் :30.05.2019

***தேனி மாவட்டம்***
***கடமலை-மயிலை ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப் பணிகளை***
***மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்:-***

*****

தேனி மாவட்டம், கடமலைக்குண்டு-மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (30.05.2019) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின்போது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் கடமலைக்குண்டு-மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மந்திசுனை-மூலக்கடை ஊராட்சி, சோலைத்தேவன்பட்டி கிராமத்தில் குடியிருப்பு பகுதிகளில் ரூ.4 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சிமிண்ட் சாலை பணி, சிறப்பாறை-பாறைக்குளம் பகுதிக்காக ரூ.41 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கீழ் நிலை குடிநீர் தொட்டி மற்றும் குழாய் பதிக்கும் பணி, யானைகஜம்-மூங்கில் ஆற்றில் தலா ரூ.16 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக 2 இடங்களில் கட்டப்படவுள்ள தடுப்பணை பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார்.

யானைகஜம்-மூங்கில் ஆற்றில் கட்டப்படவுள்ள தடுப்பணையின் மூலம் தங்கம்மாள்புரம், கோவில்பாறை, பாம்பாடுபாறை போன்ற பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டம் உயரும். மேலும், சோலைத்தேவன்பட்டி கிராமப்புற பகுதி மக்களுக்கு தினசரி டேங்கர் வாகனத்தின் மூலம் குடிநீர் வழங்கிடவும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின் போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பா.திலகவதி, செயற்பொறியாளர் எஸ்.கவிதா உட்பட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**